Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.8, Page.No.74/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | துரை | தொழில் | வக்கீல் குமஸ்தா |
| கிராமம் | பலகப்பள்ளி | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of Sep 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- ( எதிரி சிவா ஆஜரில் உள்ளார்)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வக்கீல் குமஸ்தாவாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி சிவா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். எனது வழக்கறிஞர் சின்னராஜ் அவர்கள் வண்டி திருடுபோனது சம்மந்தமாக திருப்பத்துர் நகர காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன், அப்பொழுது மேற்கண்ட கையெழுத்தை போலிசார் என்னிடம் வாங்கிக்கொண்டார்கள். அந்த வண்டி சம்மந்தமாக போலிசார் கேட்டதால் நானும் கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 15.04.2010 அன்று காலை 6.30 மணியளவில் திருப்பத்துர் நகர காவல் நிலையத்தில் எதிரி சிவா என்கிற சிவாக்குமாரை போலிஸ் காவலில் எடுத்து போலிசார் விசாரணை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எதிரி சிவா என்கிற சிவாக்குமார் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தன் முன்பு போலிசார் பதிவு செய்து அதில் தன்னிடம் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறி விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக கையொப்பம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-** இல்லை,

**மறு விசாரணை:** இல்லை.